**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கடலூர்.**

முன்னிலை: **திரு. G. விஜயகுமார்**, B.Sc., LL.M.,

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி

**2024-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 13-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.154/2019-ல்**

**வழக்கிடை மனு எண்.90/2024**

( CNR No. TNCD01 - 004180-2022)

ஜெயந்தி .. மனுதாரர்/ வாதி

/எதிராக/

P.S.R. பாஸ்கர்

.. எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பு 09.09.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. குருராஜ் அவர்களும், எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்தும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், எதிர்மனுதாரரை தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்,

**உத்தரவு**

எதிர்மனுதாரர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கான தனது பதிலுரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி, மனுதாரர் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 8 விதி 9-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

2. மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் வாதி. மனுதாரர், எதிர்மனுதாரரிடம் இருந்து

நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரரும் எதிர்கட்சி செய்து வருகிறார். மேற்படி அசல் வழக்கு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து வழக்கை நடத்துவதற்காக எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், மனுதாரர் மீதும் மனுதாரரின் கணவர் மீதும் பொய்யான குற்றச்சாட்டுகளுடன் கூடிய எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். அந்த பொய்யான குற்றச்சாட்டுகளை மறுத்து மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் பதிலுரை தாக்கல் செய்துள்ளார். பதிலுரையை ஏற்காவிடில் மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனுவுடன் தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்க அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுத்து போதுமான கால அவகாசம் கொடுத்தும், எதிர்மனுதாரர் இம்மனுவிற்கு தனது எதிருரையை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்</u>** :

மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனை</u>** :

5. அசல் வழக்கில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கான தனது பதிலுரையை ஏற்றுக்கொள்ள அனுமதிகோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கானது கடன் நிலுவைத் தொகையை வசூல்

செய்வதற்காக மனுதாரர் / வாதி, எதிரிமனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி அசல் வழக்கில் தெளிவான தீர்வு காண, எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரைக்கான மனுதாரரின் பதிலுரையை ஏற்றுக்கொண்டு இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இவ்வாறாக, இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

6. முடிவாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சுருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 13-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-**திரு. G. விஜயகுமார்**, B.Sc., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கடலூர்.

**<u>இணைப்பு</u>** :

<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

ஒம்/-**திரு. G. விஜயகுமார்**, B.Sc., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கடலூர்.

~~~~

வரைவு/சீரான உத்தரவு

I.ANo. 90/2024 in
O.S.No.154/2019

நாள் 13.09.2024

~~~~~